# கொங்கு நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகளும் இன்றைய நிலையும்

**மா.சங்கர்**

**உதவிப்பேராசிரியர் - தமிழ்த்துறை**

**விநாயகா மிஷன்ஸ் கிருபானந்த வாரியார் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**சேலம்**

**9524533976**

**tamilsankarm@gmail.com**

## முன்னுரை

தமிழ்நாடு குறிப்பாக கொங்கு நாடு கோயில்கள் நிறைந்த பகுதியாக கருதப்படுகிறது. சமய நல்லிணக்கம் நிறைந்த இடமும் கோயில் என்றால் திருவிழாவகவும் இருக்கும். திருவிழா என்பது கோயில் தொடர்பின்றி நிகழாது. திருவிழாக்கள் மதத்தின் கூறுகள் மட்டுமல்ல. நாட்டுப்புற கலைகளை வளர்க்கவும், மக்களிடையே நாட்டுப்புற இலக்கியத்தை கொண்டு செல்லவும் முக்கிய காரணமாக அமைகிறது.

## கொங்கு நாடு

தமிழகம் சங்க காலத்தில் சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்ற மூன்று பிரிவுகளைக் கொண்ட நாடாகத் திகழ்ந்தது. இந்நாடுகள் முறையே சேரனும், சோழனும், பாண்டியனும் ஆண்டு வந்ததைச் சங்க இலக்கியங்கள் மூலமாக அறிய முடிகின்றது. மேலும் அவை தொண்டை நாடு, கொங்கு நாடு என்று உட்பிரிவுகளைக் கொண்டும் விளங்கின. சங்க இலக்கியங்களில் ‘கொங்கர் நாடு’,‘கொங்கு’ என்ற சொற்கள் இடம்பெற்றுள்ளன. கொங்கு நாட்டில் சென்னிமலைக்கு அருகில் உள்ள ‘கொடுமணல்’ என்ற ஊர் சங்க இலக்கியத்தில் கொடுமணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. சங்கம் மருவிய கால இலக்கியங்களிலும் கொங்கு நாடு பற்றிய குறிப்புகள் உள்ளன. சிலப்பதிகாரத்தில் ‘கொங்கிளக்கொசர்’,‘கொங்கச்செல்வி’ என்ற தொடர்களையும், கொடுங்கர் பற்றிய குறிப்புக்களையும் காணலாம். பக்தி இலக்கியங்களிலும் கொங்கு நாடு பற்றிய பல குறிப்புகள் கிடைக்கின்றன. சம்பந்தர் தேவாரம் ‘விசயமங்கை’ என்ற ஊரைக் குறிக்கிறது. இவ்வூர் கொங்கு நாட்டில் உள்ள ‘விஜயமங்கலம்’ என்ற ஊராகும். கொங்கு நாட்டில் கொடுமுடி, திருநாகா, கரூர், அவினாசி, பூண்டி, செவூர், திருச்செங்கோடு போன்ற பாடல்பெற்ற தலங்கள் உள்ளன.

## உடுக்கையடி ஆட்டம்

நாட்டுப்புறவியலின் ஒரு பிரிவாகிய நாட்டுப்புறக் கலைகள் பற்றி ஆய்வு மிகுந்து வருகிறது. நாட்டுப்புற நடனம், நாட்டுப்புற நாடகம், நாட்டுப்புற இசை போன்ற பல்வேறு வகையான நாட்டுப்புறக் கலை வடிவங்கள் தமிழகமெங்கும் காணப்படுகின்றன. கொங்கு மண்டலத்தில் உடுக்கை இசைக் கருவியைப் பயன்படுத்தி இசையோடு ஆடிப்பாடும் நிகழ்த்துக் கலையாக கதைப்பாடல் வடிவத்தில் காணப்படுவது அண்ணமார்சாமி கதை ஆகும்.

**உடுக்கை**

உடுக்கை என்னும் சொல்லிற்கு உடை, இடை, சுருங்கு, பறை என்னும் பொருளையும் உடுக்கு என்னும் சொல்லிற்கு உடுக்கை, தமருகம், என்னும் பறை என்னும் பொருளையும் ந.சி.கந்தையாபிள்ளையின் தமிழ் அகராதி குறிப்பிடுகின்றது. அங்காளம்மன், மாரியம்மன் கோயில்களில் வழிபாட்டுச் சடங்காக உடுக்கையடித்துப் பாடப்படும் வழக்கம் உண்டு என்பது தெளிவாகிறது. கோயில்களில் உள்ள மூலதெய்வம், துணைத்தெய்வம் என்ற வேறுபாடு இல்லாமல் அனைத்து தெய்வத்தையும் உடுக்கை பாடல் மூலம் போற்றிப் பாடுவது நாட்டுப்புற மக்களின் சமயப் பண்பாட்டு மரபாக இருந்து வந்துள்ளது.

குறி சொல்லும் போதும், பேயை விரட்டும் போதும் உடுக்கையைக் கோடாங்கி என்று கூறுவர். உடுக்கையை ‘இரு முக முழவு’ என்ற கலைச்சொல்லால் குறிப்பிடலாம். உடும்புத்தோல், இளங்கன்றின் தோல் ஆகியவைக் கொண்டு உடுக்கை செய்யப்படுகிறது. உடுக்கையடி என்னும் நிகழ்த்துக்கலை எவ்வாறு நிகழ்த்தப்படுகிறது என்றால், உடுக்கை என்னும் இசைக்கருவியை அடித்துக் கொண்டு ஓர் ஆணும் ஓர் பெண்ணும் அல்லது பெண் வேடமிட்டவரும் கதைப்பாடலைப்பாடி ஆடி நிகழ்த்தும் நிகழ்ச்சி உடுக்கை நிகழ்ச்சி என்று அழைக்கப்படுகிறது. கோவை,ஈரோடு, உடுமலைப்பேட்டை, பழனி முதலான பகுதிகளில் உடுக்கை நிகழ்ச்சி மிகுதியாக நிகழ்த்தப்படுகிறது. தொடக்கத்தில் கோயிற்சடங்குக் கலையாக இருந்த இக்கலை தற்போது பொழுதுபோக்குக் கலையாகவும் கோயில் விழாக்களின் போது நிகழ்த்தப்படுகிறது. வண்ணார், நாவிதர் சாதியினர் உடுக்கை நிகழ்ச்சி நடத்தும் போது ஓரிடத்தில் அமர்ந்து பாடுவர். உடுக்கையினை இசைத்துக் கொண்டு கதைப்பாடலைப் பாட பின்னால் ஒருவர் அல்லது இருவர் ஆமாம் போடுவர். உடுக்கை நிகழ்ச்சியில் அண்ணன்மார்சாமி கதை மிகுதியாக இடம் பெறும்.

**உடுக்கையும் அண்ணன்மார் கதையும்**

உடுக்கை இசைக்கருவியைக் கொண்டு கொங்கு மண்டலத்தின் பெரும்பாலான இடங்களில் அண்ணன்மார்சாமி கதை நிகழ்த்துக்கலையாக நிகழ்த்தப்பட்டு வருகிறது. தென் மாவட்டங்களில் வில்லுப்பாட்டும் தென்னார்காடு மாவட்டத்தில் தெருக்கூத்தும் முக்கியமான இடத்தைப் பிடித்து இருப்பதைப் போலவே கொங்கு மண்டலத்தில் உடுக்கையடிக் கதைப்பாடல் முக்கியமான

இடத்தைப் பிடித்துள்ளது. தமிழ்நாட்டின் சிற்சில இடங்களில் காத்தவராயன் கதை உடுக்கையடிக்கதையாக நிகழ்த்திக்காட்டப்படுகின்றன. ஆனால் கொங்கு மண்டத்தில் பெரும்பாலான இடங்களில் அண்ணன்மார்சாமி கதை உடுக்கையடிக் கதைப்பாடலாக நிகழ்த்திக்காட்டப்படுகின்றன. இக்கதை, தெருக்கூத்து, உரைநடை நாடகம், வாய்மொழிப்பாட்டு போன்ற பிற வடிவங்களில் நிகழ்த்தப்பட்டாலும் கைகளில் உடுக்கையை வைத்துக்கொண்டு கதைப்பாடலாக பாடப்படுவதே பெரும்பாலான மக்களால் விரும்பி ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. கோவை, சேலம், திருச்சி, போன்ற மாவட்டங்களில் உள்ள நாட்டார் தெய்வ வழிபாட்டு இடங்களில் உடுக்கடித்துப் பாடப்படும் கதைப்பாடல்களே காணப்படுகின்றன. அவற்றில் பொன்னர் சங்கர் கதை, அண்ணன்மார்சாமி கதை, குன்னுடையாக் கவுண்டர் கதை என்று பல்வேறு பெயர்களில் குறிப்பிடப்படும் உடுக்கைப்பாட்டு கோவை, சேலம் மாவட்டங்களில் நிகழ்த்தப்படுகிறது. இக்கதைப்பாடல்களைப் பாடுவோர் பொள்ளாச்சி, உடுமலை, திருப்பூர், கோவை,ஈரோடு, கரூர், சேலம், சத்தியமங்கலம் போன்ற பகுதிகளில் அதிகமாக இருக்கிறார்கள்.

**உடுக்கையடிக் கலைஞர்கள்**

உடுக்கை இசைக்கருவி மாட்டுத்தோலால் செய்யப்பட்டதாகும். ஆதை வாசிப்பவர்கள் தீண்டத்தகாவர்களாகவும், தீட்டுக் குரியவர்களாகவும் கருதப்பட்டனர். எனவே ஆகம விதிகளுக்குட்பட்ட பெருந்தெய்வ வழிபாடு உள்ள கோயில்களில் இவ்இசைக்கருவி இசைக்க அனுமதிக்கப்படுவதில்லை. ‘‘இசையைத் தம் வாழ்வாகக் கொண்டிருந்த பறையர், துடியர், பாணர்கள், பாடினிகள், சமூக வாழ்விலிருந்துமே விலக்கி வைக்கப்பட்டமை, தமிழர் பண்டை இசையையும், விலக்கி வைக்கப்பட்டதாக ஆயிற்று’’ என்று இசைக்கருவி வாசிப்போர் நிலை குறித்துக் கூறுவர். எனவே பண்டைக்காலத்திலேயே துடியை வாசித்தவர்கள் விலக்கி வைக்கப்பட்டிருந்தார்கள்.

**உடுக்கையடிக் கலையின் இன்றைய நிலை**

பழம்பெரும் கலையான உடுக்கையடிக் கலை இன்றைய சூழலில் கதைப்பாடலை சொல்லும் நிகழ்த்து கலையாகவே பயன்படுத்தப்படுகின்றது. உடுக்கையடிக் கலையின் மூலமாகக் காத்தவராயன் கதைப்பாடல், மதுரைவீரன் கதைப்பாடல், நல்லதங்காள் கதைப்பாடல், கண்ணகி – கோவலன் கதைப்பாடல் போன்ற பல கதைப்பாடல்கள் நிகழ்த்தப்படுகின்றன. எனினும் அண்ணன்மார்சாமி கதைப்பாடல் நிகழ்த்தப்படுவதின் வாயிலாக இவ்உடுக்கையடிக் கலையின் இன்றைய நிலையைக் கண்டறிய முடிகிறது. கோவை மாவட்டத்தில் உடுக்கையடிக் கலையை நடத்தக் கூடிய கலைஞர்கள் பெரும்பாலும் வண்ணார்,நாவிதர் சாதியைச் சேர்ந்தவர்களாக உள்ளனர். இக்கலைஞர்கள் இரண்டு அல்லது மூன்று பேர் சேர்ந்து அண்ணன்மார்சாமி கதை

நன்கு தெரிந்த கிராமத்தைத் தேர்ந்தெடுத்து அந்தப் பகுதியில் ஆடுகளம் அமைத்து உடுக்கையடி இசைப்பார்கள்.

உடுக்கை என்னும் தோலிசைக்கருவியின் மூலம் நிகழ்த்துக்கலை நிகழ்த்துப்பட்டு வருவதை கொங்கு நாட்டின் பெரும்பாலன பகுதிகளில் காணலாம். உடுக்கையின் மூலம் அண்ணன்மார்சாமி கதைப்பாடல் பாட்டாகப் பாடப்பட்டு வருகின்றது. உடுக்கை இசையை சமயச் சடங்கிற்கும், சாமி அழைத்தலுக்கும் பயன்படுத்தப்படுவதுமாக உள்ளது. காத்தவராயன் கதை, மதுரை வீரன் கதை, கண்ணகி – கோவலன் கதை ஆகியவைகளைப் பாட்டாக சொல்வதற்கு இவ் உடுக்கை இசைக் கலை பயன்படுத்தப்படுகிறது. உடுக்கையடிக் கலை நாட்டுப்புறவியலில் ஒரு கூறாக அமைந்துள்ளது. நாட்டுப்புறவியல் என்னும் சொல்லின் விளக்கமும், வரையறையும், நாட்டுப்புறவியலின் வகைகளும், கதைப்பாடல் என்பதன் வரையறையும், கதைப்பாடலின் விளக்கமும் விரிவாக ஆராய்ந்து கூறப்பட்டுள்ளது. உடுக்கை என்னும் சொல்லின் பொருள், இலக்கியங்களில் காணப்படும் உடுக்கை என்னும் சொல்லுக்குரிய விளக்கம், தோற்கருவிகளின் வகைகள், உடுக்கையடிக் கலையின் பயன்பாடு, உடுக்கையின் தோற்றம், உடுக்கையின் வகைகள், உடுக்கையின் அமைப்பு, மர உடுக்கை, மண் உடுக்கை, வெண்கல உடுக்கை ஆகியவைகளின் சிறப்பு, உடுக்கையும் சிவபெருமானுக்கும் உள்ள தொடர்பு, புராணக் கதைகளில் உடுக்கையின் பங்கு, உடுக்கையில் அண்ணன்மார்சாமி கதை சொல்லப்படும் விதம், உடுக்கையடிக் கலைஞர்களின் வாழ்க்கை வரலாறு, உடுக்கையடிக் கலைஞர்களின் இன்றைய நிலையில் குறைவாகவே நிகழ்த்தப்பட்டு வருகிறது. ஏதிர்காலத்தில் உடுக்கையடிக் கலை வளர்ச்சியடையவும்,அண்ணன்மார்சாமி கதை மேலும் பல இடங்களில் பரவுவதற்கும் மிகுதியான வாய்ப்புகள் உள்ளன. இன்றைய உடுக்கையடிக் கலைஞர்கள், பொருளாதார மேம்பாடு அடைவதற்கும், சமூக மதிப்பு பெறுவதற்கும், எதிர்காலத்தில் உடுக்கையடிக் கலை சிறந்தோங்குவதற்கும் வாய்ப்புகள் மிகுதியாக அமைந்துள்ளன.

**தெருக்கூத்து**

தமிழர்களின் பாரம்பரியத்தை அடையாளப்படுத்தும் கலைகளில் கூத்தும் ஒன்றாக விளங்குகிறது. நெஞ்சை அள்ளும் நிகழ்த்து கலைகளுள் தெருக்கூத்தும் ஒன்று. கூத்துக்கலை இசைக்கலையைப் போலவே பழமை வாய்ந்தது என்பார் மயிலை சீனி வேங்கடசாமி. தெருக்கூத்து நாட்டுப்புற மக்களால் நடத்தப்படும் நாட்டுப்புறக் கலையாகும்.தெருக்கூத்து என்ற பெயர் நிகழ்த்தப்படும் .இடத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது தெருக்கூத்து என்ற சொல்லிற்குப் பொருளாக வீதியிலாடப்படும் கோலாட்டம் புலியாட்டம் போன்ற நடன வகைகளும் கூறப்பட்டு வருகிறது.ஆனால் கட்டை கட்டியாடும் கூத்து என்ற பெயரில் இன்றும் கட்டைகளாலாகிய அணிகலன்களுடன் ஆடியும் பாடியும் நடத்தப்படும் கிராமிய நாடகமே தெருக்கூத்து என்பதன் சரியான பொருள் என்று அ.அறிவுநம்பி கூறுகிறார்.

**தெருக்கூத்து – வரையறை**

கூத்து என்பது இசையுடன் இசைவழி வரும் அசைவியக்கத்துடன் தொடர்புடையது.இசையின் முறைக்கேற்ற ஆடல் முறைமை கொண்டு கூத்து நிகழ்த்தப்பெறுகின்றது.கதையின் பொருளுக்கும் சித்தரித்துக் காட்டப்பெறும் உணர்வுநிலைக்கும் ஏற்ப இசையுடன் தாளமும் பெறும்.ஆடுபவரின் அசைவியக்கம் தாளக் கட்டினால் வரையறுக்கப்படுகிறது என்று கா.சிவதம்பி கூறுகிறார். வசனம், பாடல், ஆட்டம், மெய்ப்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைப்பை நிகழ்த்துதலின் வெளிப்பாடாக்கி கோயில் சடங்கின் ஒரு கூறாய் விளங்கும்.நாட்டுப்புற இசைகெழு நாட்டிய நாடகம் என்று மு.இராமசாமி விளங்குகிறார். திறந்தவெளியை ஆடுகளமாக்கி ஆடை, ஆணி ஒப்பனையும் நிகழ்த்துனர்கள்.இசை, வசனம், பாடல், ஆடல், மெய்ப்பாடு, ஆகியவற்றை ஒருங்கிணைத்து வெளிப்படுத்துவதை தெருக்கூத்து என்று கூறலாம். ஒரு கதையை எடுத்துக் கொண்டு அதில் வரும் பாத்திரங்களையெல்லாம் நடிகர்களாக அமைத்து உரை மாற்றங்களாகவும் பாடல்களாலும்,செயல்களாலும் அக்கதை பொருளைப் பலர் காண ஒரு அரங்கத்தில் நடித்துக் காட்டுவதும் நாடகமென்பது இக்காலத்தில் நாம் கூறுகிறோம்.ஆயினும் இக்கால நாடகத்திலிருந்து வேறுபட்ட கலை வடிவம் தெருக்கூத்துக் கலையாகும்.

**தெருக்கூத்து நடைபெறும் இடம்**

துவக்க காலங்களில் களத்துமேடுகளில் நடைபெற்ற தெருக்கூத்து பின்பு தெரு சந்திப்புக்களில் வெட்டவெளியில் நடந்தது.கோவில் சார்பு கலையாக வளர்ச்சி அடைந்த காலத்தில் மூல விக்கிரத்திற்கு எதிர்புறம் பார்வையாளர் அமர்ந்து காணும் இடத்தில் நடைபெற்று தெரு சந்திப்பில் தீப்பந்தங்களுக்கு இடையே நடைபெற்ற தெருக்கூத்து வட்டரங்களாக முதலில் அமைந்திருந்தது.இரண்டு மரக்கம்புகளை நட்டு குறுக்கே மூங்கிலை கட்டி மண்ணெண்ணை விளக்கு ஏற்றியோ பெட்ரோமாஸ் விளக்குகளை எரிய வைத்த செவ்வக வடிவில் அமைக்கப்பெற்ற இடத்தில் கூத்து ஆடப்பட்டது.இசைக் கருவிகளை வாசிப்பவன் நின்று கொண்டே இசைக் கருவிகளை வாசித்து வந்தான்.இங்கு எவ்வித அமைப்பு ரீதியான ஒழுங்கமைப்பு இல்லாமல் இருந்து வந்துள்ளது.உரல், விசுப்பலகை இடம் பெற்ற பின்னர் ஓர் ஒழுங்குக்கு வந்தது.திரௌபதி அம்மன் கோவில் சடங்காகத் தெருக்கூத்து இடம் பெற்ற பின்னர் கோவில் மூல விக்கிரகத்திற்கு எதிர் திசையில் ஒப்பனை அறையை ஒட்டி அமைக்கப்பட்ட வடிவத்தையும் காண முடிகிறது.

**தெருக்கூத்து – நடத்துவதின் நோக்கம்**

தெருக்கூத்து வேளாண்மை செய்வோரின் கலையாக,மழைக்காகவும் வேண்டுதலுக்காவும் தெருக்கூத்து நடத்தப்பட்ட செய்தியை அறிகின்றோம்.மழை வேண்டிய அருச்சுனன் தபசு நாடகம்

நடத்தியதாகக் கூறுகிறார்.திருப்பதி சென்று நேர்த்திக்கடன் முடித்து திரும்பியதும் நேர்த்திக்கடனின் ஒரு கூறாக,தெருக்கூத்து நடத்தப்பட்டது,காது குத்துதல் நிகழ்ச்சிக்குத் தெருக்கூத்து நடத்தப்பட்டிருக்கிறது.சாவு வீட்டில் கருமாதி நாட்களில்,இறந்தவர் நினைவாக விழாக் கொண்டாடும் போது கர்ணமோட்சம் நடத்துகின்றனர்.இரண்டு ஊர் பஞ்சாயத்து கூடி ஒரு வழக்கை விசாரித்து தீர்ப்பு வழங்கிய பின்னர் தெருக்கூத்து இரண்டு ஊர் மக்களும் சேர்த்து நடத்துவர்.கிராம புற கோவிலில் 10 நாட்கள் முதல் 20 அல்லது 30 நாட்கள் வரை வசதி வாய்ப்புக்கேற்ப தெருக்கூத்து நடத்துவர்.இது மன்றம் அல்லாத முருகன் கோவில்,மாரியம்மன் கோவில்,பிள்ளையார் கோவில்,கூத்தாண்டவர் கோவில்,பெரியாணடவர் கோவில்களில் தெருக்கூத்து நடத்துகின்றனர். அரசு விழாக்கள்,பொங்கல் விழா போன்றவற்றிலும் தெருக்கூத்து நடத்துகின்றனர்.தெருக்கூத்து போட்டிகள் நடத்தப்பட்டு இருக்கின்றன.இடி விழுந்தமைக்காக அருச்சுணன் தபசு நாடகம் நடத்தப்படுகிறது. இறைவழிபாட்டில் வேண்டுதல் நிலையிலிருந்த கலை அனைத்து மாவட்டங்களிளும் நம்பிக்கை அடிப்படையில் இன்று ஆடப்படுகிறது.கிராம கோவில்களில் சமயச் சடங்கு நிலையிலிருந்த கலைகள் இன்று மலிவுற்று காணப்படுகிறது என்று கூறுகிறார் நாமக்கல் மாவட்டத் தெருக்கூத்து கலைஞர் செங்கோடன் கூறுகிறார். மழை வேண்டியும்,பிணிநீங்க வேண்டியும்,மகப்பேறு வேண்டியும்,தான் பெற்ற வளத்திற்கு நன்றிக் கடனாகவும் இறைவழிபாட்டுச் சடங்காகவும்,புனித சடங்காகவும் ஆடப்பட்டு வந்த தெருக்கூத்து இன்று மக்கள் மகிழ்ச்சிக்காகவும் கூட்டம் சேர்ப்பதற்குப் பயன்படுவதைக் காணமுடிகிறது.அரசு திட்டங்கள் பரப்பவும் அறிவுறுத்தவும் பயன்படுத்தப்படுகிறது.இவ்வடிவத்தில் தான் அடிக்கடி வந்து போகும் திரைச்சீலை அமைப்பும்,அலங்காரம் செய்து கொள்வதற்கான அமைப்பும் வளர்ச்சியடைந்தன. ஒரு காலத்தில் வெட்டவெளியில் தெருக்கூத்து நடத்தியவர்கள் பின் கீற்றுக் கொட்டகை அமைத்தும்,மண்மேடை எழுப்பியும்,அரங்கம் அமைத்தும் படுதாள் தொங்கவிட்டும் தெருக்கூத்தை நிகழ்த்தினர்.1930க்கு முன் தீப்பந்தங்கள் மூலம் ஒளியமைப்பு செய்யப்பட்டது.பின்பு மண்ணெண்ணை விளக்கு அல்லது பெட்ரோமாஸ் விளக்கு மூலமாக ஒளிநிறைந்த அரை வட்டப் பகுதியிலே தெருக்கூத்து நடத்தப்பட்டன.இன்று பெட்டி போன்ற அமைப்பில் ஒரு பக்கம் அணியறை அமைய,முன்புறம் உள்ள இரண்டு கம்பங்களிலும் மின்விளக்கு எரிய, கூரைப் பகுதியிலும் மின்விளக்கு வடிவில் மாற்றி அமைக்கப்பட்ட அரங்கில் தெருக்கூத்து இன்று நிகழ்த்தப்படுகிறது.

**தெருக்கூத்துக் கலையின் இன்றைய நிலை**

நாட்டுப்புறக் கலைகளுள் ஒன்றான தெருக்கூத்து இன்றையளவில் அழிவின் விழிம்பினை நோக்கி உள்ளது. அதற்கு காரணம் இன்றைய ஆபாச நிகழ்ச்சிகள். ஒரு காலத்தில் காப்பிய நூலான சிலப்பதிகாரத்தில் மாதவியின் பதினோரு ஆடல் நிகழ்ச்சிகள் இருந்தன. பழங்காலத்தில் இருந்த புராணக்கதைகள், வாழ்வியல் முறைகள், கடவுள் நம்பிக்கை, மனிதனின் வாழ்வியல்,

சமுதாயச்சூழல், விவாசயம் இவற்றை மையமாகக் கொண்டு தெருக்கூத்து நிகழ்த்தப்பட்டன. தெருக்கூத்து என்பதற்கு தெருவின் ஓரம் ஆடும் ஆட்டம் என்று பொருள். தெருவின் ஓரம் மேடை அமைத்து ஆடும் ஆட்டம் இது. ஒரு வேடம் வெளிவருவதற்கு குறைந்த பட்சம் ஒரு மணி நேரம் வேடம் புனைய வேண்டும். பின்னர் தன்னுடைய குரலில் ஏற்றத்தாழ்வுகள், குரல் வளத்தை மாற்றி தெருக்கூத்துக் கலைஞர்கள் மக்களை மகிழ்விக்கின்றனர். தென் மாவட்டங்கள், வட மாவட்டங்களில் இக்கலை இன்னும் வழக்கில் உள்ளது. வட மாவட்டங்களில் அதிகமாக இக்கலையை வாழ்வியலுடன் மக்கள் இணைந்து வாழ்கின்றனர். வட மாவட்டங்களில் தெருக்கூத்து கலைஞர்களின் உடைகள், ஒப்பனைகள், கதாபாத்திரங்கள் அனைத்தும் தெற்கத்திய கலைஞர்களிடமிருந்து வேறுபட்டிருக்கும். இன்றைய காலத்தில் தெருக்கூத்து என்ற நாட்டுப்புறக்கலை மறையத்தொடங்கியுள்ளது. இதை மீட்டுருவாக்கம் செய்யும் வகையில் அனைத்து தெருக்கூத்து கலைஞர்கள் அணைவரும் சேர்ந்து செய்தித்தாள், இணையம், முகநூல் போன்ற சமூக வலைதளங்களில் தெருக்கூத்து தொடர்புடைய வேடப்புகைபடங்களை பதிவு செய்கின்றனர். மக்களுடைய பார்வையில் விழும் மாதிரி தெருக்கூத்து வெளியிடுகின்றனர்.

இன்றைய இளைஞர்களுக்கு தெருக்கூத்து என்ற ஒரு அற்புதக்கலை இருக்கின்றது என அறியாமலேயே அவர்கள் வளர்கிறார்கள். நாட்டுப்புக்கலைகளை இளையஞர்களுக்கு அறியச்செய்யும் வகையில் பல நிகழ்ச்சிகள் நடத்தப்பட வேண்டும். இதை மையமாகக் கொண்டு பாரதியார் பல்கலைக்கழகம் முதுகலைப்பட்ட மேற்படிப்பு விரிவாக்க மையத்தில், தமிழத்துறை மாணவர்கள் புறநானூற்றில் தாயின் வீரப்பாடலை மையமாகக் கொண்டு நான்கு மாணவர்கள் சேர்ந்து தெருக்கூத்து ஒப்பனைகளுடன் 2018 ஆம் ஆண்டு மேடையில் நடித்தனர். புறநானூற்று பாடலில் வருகின்ற தாயின் வேடத்தில் பா.இராமன் என்ற மாணவனும், கணவன் வேடத்தில் முகமது ஜான் பாட்ஷா மாணவனும், மகன் வேடத்தில் மா.சங்கர் மாணவனும், பகை நாட்டு அரசராக அ.அரிஹரன் என்ற மாணவனும் நடித்தனர்.

**முடிவுரை**

கொங்கு மண்டல பகுதியில் நாட்டுப்புற நிகழ்த்துக் கலைகள் அதிகமாக நிகழ்த்துப்பட்டு வருவதை நாம் அறிந்த ஒன்று. ஆனால் இன்றைய அளவில் இந்த உடுக்கையடி கலையும், தெருக்கூத்துக்கலையும் நளிவடைந்து வருவதை நம் கண் முன்னே கண்டு கொண்டு பார்த்துக்கொண்டு இருக்கிறோம். இந்த நாட்டுப்புற நிகழ்த்துக்கலைகளை நாம் மீட்டு எடுப்போம்.

**துணைநூற்பட்டியல்**

1. வேங்கடசாமி மயிலை சீனி. கொங்கு நாட்டு வரலாறு : பழங்காலம் - கி.பி. 250 வரையில்
2. கோவை கிழார் - கொங்கு நாட்டு வரலாறு
3. பேரா.ப. கிருஷ்ணசாமி - கொங்குநாட்டு வரலாறும் அண்ணன்மார் வழிபாடும்
4. கோ. பழனி, சி. முத்துகந்தன் - தெருக்கூத்துக் கலைஞர்கள் களஞ்சியம்
5. மா.சங்கர் - கொங்கு நாட்டுக் கூத்து